www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**12**

தேர்வு எண்:

# காலாண்டுத் தேர்வு - 2024

## தமிழ்

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக** 14 × 1 = 14

1. கடலின் பெரியது
   அ) உற்ற காலத்தில் செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி
   இ) தினையளவு செய்த உதவி ஈ) செய்யாமல் செய்த உதவி
2. "காவினெம் கலனே ; சுருக்கினெம் கலப்பை" - இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள்.
   அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக் கருவி ஈ) வேளாண் கருவி
3. விளியறி ஞமலி - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?
   அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி
4. பொருத்துக
   அ) குரங்குகள் - 1) கன்றுகளைத் தவிர்த்தன
   ஆ) பசுக்கள் - 2) மரங்களிலிருந்து விழுந்தன
   இ) பறவைகள் - 3) குளிரால் நடுங்கின
   ஈ) விலங்குகள் - 4) மேய்ச்சலை மறந்தன
   அ) 1,3,4,2 ஆ) 3,1,2,4 இ) 3,2,1,4 ஈ) 2,1,3,4
5. 'தமிழ் அழகியல்' என்ற நூலின் ஆசிரியர் யார்?
   அ) சிற்பி பாலசுப்பிரமணியம் ஆ) அய்யப்ப மாதவன்
   இ) தி.சு. நடராசன் ஈ) பரலி சு. நெல்லையப்பர்.
6. 'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
   அஃறிணை என்மனார் அவரல பிறவே'. - இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல் ______.
   அ) நன்னூல் ஆ) அகத்தியம் இ) இலக்கண விளக்கம் ஈ) தொல்காப்பியம்
7. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
   அ) வசம்பு ஆ) கடுக்காய் இ) மணத்தக்காளியிலைச் சாறு ஈ) மாவிலைக் கரி
8. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் - காரணம்
   அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம் ஆ) மென்பொருள், வன்பொருள், வாகனஉற்பத்தியில் பங்கு
   இ) மென் பொருள் ஏற்றுமதியில் முன்னிலை ஈ) அ, ஆ, இ - அனைத்தும்
9. படிமம் என்பதன் பொருள்
   அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி
10. தோப்பில் முகமது மீரானுக்குச் சாகித்திய அகாதெமி விருது பெற்றுத் தந்த நூல்.
    அ) கூனன் தோப்பு ஆ) துறைமுகம்
    இ) சாய்வு நாற்காலி ஈ) ஒரு குட்டித் தீவின் வரைபடம்.
11. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன அவை ______
    அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்
    இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்.
12. பேச்சுத் தமிழில் அமைந்த தொடரைத் தேர்க
    அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்
    ஆ) புத்தகக் கண்காட்சி நடை பெறுகிறது.
    இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.
    ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.
13. 'மலரடி'- என்ற சொல்லின் இலக்கணக் குறிப்பு
    அ) உவமைத் தொகை ஆ) உம்மைத் தொகை
    இ) வினைத் தொகை ஈ) பண்புத் தொகை
14. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன். வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது
    அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

பகுதி - II பிரிவு -1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக** 3 × 2 = 6

15. கலிவிழா, ஒலிவிழா - விளக்கம் தருக
16. 'எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்' - யார்க்கு?
17. சினத்தை ஏன் காக்க வேண்டும்?
18. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக** 2 x 2 = 4

19. புக்கில், தன்மனை - சிறு குறிப்பு எழுதுக
20. மையாடல் விழா' என்றால் என்ன?
21. அக்காலத்துக் கல்வி முறையில் மனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?

பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடைதருக** 7 × 2 = 14

22. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக. தலை, தளை, தழை
23. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக்குக.
    சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.
24. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக. (அ) நினைக்கின்ற **(அல்லது)** (ஆ) கலங்கி



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

25. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக. (அ) செந்தமிழே (அல்லது) (ஆ) எத்திசை
26. கலைச் சொல்லாக்கம் தருக (அ) Conviction (ஆ) Lobby
27. மூன்றாவது சீர் அமைத்து எழுதுக
அ) நல்லவை செய்யின்______ ஆ) அவமதிப்பும் ஆன்ற______
28. "மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது. இதில் எவ்வகை படிமம் வெளிப்படுகிறது?
29. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக
அ) நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும்
30. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க
(அ) தாமரை (ஆ) வெங்காயம்.

## பகுதி - III பிரிவு -1

எவையேனும் இரண்டனுக்கு விடை தங்க 2 x 4 = 8

31. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?
32. "வருபவர் எவராயினும் நன்றி செலுத்து"-இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
33. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?
34. வாயிலோயே எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப்பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக.

## பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. 2 x 4 = 8

35. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?
36. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்து உரைக்க
37. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில்,இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக
38. சங்கப் பாடல்களில் ஒலிக் கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் -விளக்குக

## பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு விடைதருக 3 x 4 = 12

39. அ) நிரல் நிறை அணியைச் சான்றுடன் விளக்குக.
(அல்லது)
ஆ) சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும்
ஏமப் புணையைச் சுடும். - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக
40. அ) பாடாண் திணையைச் சான்று தந்து விளக்குக
(அல்லது)
(ஆ) கூதிர்ப்பாசறை துறையைச் சான்றுடன் விளக்குக.
41. இலக்கிய நயம் பாராட்டுக:

வெட்டி யடிக்குது மின்னல் - கடல்
விரத் திரை கொண்டு விண்ணை யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம் - கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய - மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!

- பாரதியார்

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து விளக்குக.
அ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்
(அல்லது)
தினை விதைத்தவன் தினை அறுப்பான் .
43. தமிழாக்கம் தருக.
அ) A new language is a new life
ஆ) The limits of my language are the limits of my world.
இ) Knowledge of language is the doorway to wisdom
ஈ) If you want people to understand you, speak their language.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக 3 x 6 = 18

44. (அ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப் பகுதி வழி நிறுவுக.
(அல்லது)
(ஆ) கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.
45. (அ) "ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு - நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுது (அல்லது)
ஆ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக
46. அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க
(அல்லது)
ஆ) சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை ?

## பகுதி - V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தரு 4 + 2 = 6

47. அ) "குகனோடும் ஐவர்"- எனத் தொடங்கும், கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
ஆ) "படும்" - என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# காலாண்டுத் தேர்வு - 2024-25

## தமிழ் . விடைத்தாள் 12-ஆம் வகுப்பு

S. ஜெயந்தி
முதுகலை தமிழாசிரியர்
ரூபி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி
தனியார் பள்ளி
சரவணம்பட்டி.
9790181550
கோவை.

I பலவுள் தெரிக.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆ. | பயன் கருதாமல் ஒருவர் செய்த உதவி | 1 |
| 2. | இ. | இசைக் கருவி | 1 |
| 3. | இ. | நாய் | 1 |
| 4. | ஆ | 3,1,2,4 | 1 |
| 5. | இ | தி.சு. நடராசன் | 1 |
| 6. | ஈ. | தொல்காப்பியம் | 1 |
| 7. | ஆ. | கடுக்காய் | 1 |
| 8. | ஈ. | அ,ஆ,இ - அனைத்தும் | 1 |
| 9. | இ. | காட்சி | 1 |
| 10. | ஈ. | ஒரு கட்டுத் தீவின் வரைபடம் | 1 |
| 11. | ஆ. | திருமணமும் குடும்பமும் | 1 |
| 12. | அ | அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும் | 1 |
| 13. | அ. | உவமைத்தொகை | 1 |
| 14 | ஈ. | இவை அனைத்தும். | 1 |

II பகுதி : II பிரிவு I

15 கனிவிழா : எழுச்சி மிக்க விழா 1
ஒளிவிழா : ஆரவார விழா 1

16. கலைத்தொழிலில் வல்லவராக இருப்பவர்களுக்கு எத்திசையில் சென்றாலும் சோறு தட்டாமல் கிடைக்கும். 2

17 i) ஒருவர் தன்னைத்தான் காத்துக்கொள்ள விரும்பினால் சினம் வராமல் காத்துக் கொள்ள வேண்டும். 1
ii) காக்காவிட்டால் சினம் நம்மையே அழித்துவிடும். 1

18 i) கடினமான வேலையினைச் செய்யும் தொழிலாளர்களின் கைகள், மாலைநேரத்தில் சூரியனின் செந்நிறக் கதிர்கள் சிவந்திருக்கின்ற வானத்தைப் போல் காணப்படும். 1
ii) பருத்த தோள்களில் வியர்வைத் துளிகள் முத்துகள் போல் சிதறிக் காணப்படும். 1

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பிரிவு : 2

19. புக்கில் – தற்காலிகமாகத் தங்குமிடம் 1

தன்மனை – பெற்றோரிடமிருந்து தனியாக வாழுமிடம் 1

20. மையாடல் விழா:

i) வசம்பு, மஞ்சள், மணத்தக்காளி இலைச்சாறு, மாவிலைக்கரி, தர்ப்பைக்கரி முதலியவற்றைச் சேர்த்து செய்த மையை சுவடியில் தடவி வாசிக்கச் செய்வார்கள். 1

ii) இதனை அக்கரப்பியாசத்தை மையாடல் விழா என்று கூறுவர். 1

21. நன்னூல், நிகண்டு, காரிகை, தண்டியலங்காரம் 2

(அல்லது)

நீதிநூல்கள் : ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி

இலக்கண நூல்கள் : நன்னூல், காரிகை, தண்டியலங்காரம் நிகண்டு நூல்கள் மற்றும் கணித வாய்பாடுகள் 2

பிரிவு : 3

22. தலை, தளை, தழை

ஆடுமாடுகள் தளையால் இருந்த இலைதழை தின்ன மேய்ந்ததைக் கண்டு இறைவன் சிறுகல்லை எடுத்து ஆட்டின் தலையால் படுமாறு வீசினான். 2

(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)

23. சான்றோர்க்கு மதிப்புக் கொடுத்தால் வாழ்வில் உயரலாம். 2

(அல்லது)

சான்றோர்க்கு மதிப்புக் கொடுத்து வாழ்ந்தால் உயரலாம்.

24. பகுபத உறுப்பிலக்கணம்:

அ) நினைக்கின்ற – நினை + க் + கின்று + அ 1

நினை – பகுதி

க் – சந்தி

கின்று – நிகழ்கால இடைநிலை

அ – பெயரெச்ச விகுதி 1

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

ஆ) கலங்கி = கலங்கு + இ 1
கலங்கு - பகுதி
இ - வினையெச்ச விகுதி. 1

25. புணர்ச்சி விதி:
அ) செந்தமிழ் - செம்மை + தமிழ் 1
விதி: 1 ஈறு போதல்
விதி: 2 இனமிகல் 1

ஆ) எத்திசை - எ + திசை 1
விதி: இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் 1
கசதப மிகும். (எத்திசை)

27. அ) நல்லவை செய்யான் அல்லவை நீங்கும். 1
ஆ) அவமதிப்பும் ஆன்ற மதிப்பும். 1

26. கலைச்சொல்:
அ) Conviction - தண்டனை 1
ஆ) Lobby - ஓய்வறை. 1

28. மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது - உவமைப்படுத்தல். 2

29. நிலத்தை உழ வேண்டும் அப்போது தான் வயிறு நிறையும். 2

30. அ) தாமரை - குளத்தில் தாமரை மலர்ந்திருக்கிறது. 1
தா + மரை - தாவுகின்ற மானைக் கண்டேன். 1

ஆ) வெங்காயம் - வெங்காயம் உடலுக்கு நல்லது. 1
வெம் + காயம் - போரினால் ஏற்பட்டது. (வெம்மை காயம்) 1

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பகுதி: III பிரிவு: 1

31. i) தாழ்வான பகுதிகளில் பெருமையை உணர்த்த குளங்கள் அமைத்து, உயர்ந்த கரையுடைய ... மேடான பகுதிகளில் ஏரிகள், அருகில் உரிய நிலங்களை ... நிலங்களில் மேய விட்டனர். 1 1/2

ii) அவர்கள் குடியிருந்த சோழன் மன்னர்களில் பாண்டிய நாட்டினர் மேலும் இனிமை சேர்ப்பதற்குரியது 1

iii) இனிமையான பழுத்த சேர்ந்து கொண்டு நெருப்பினால் வைகைகளுக்குச் சுற்றி கண்ணாடி -களில் வைத்தனர். 1 1/2

32. இடம்: ஜவஹரின் குடியரசு நாகர்கோவில் பேரணியில் என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ளது. 1

பொருள்: நம் நாட்டிற்கு உழைப்பவர் எவராயினும் நன்று நல்லவர்களோ தீயவர்களோ அவர்களுக்கு நன்றி செலுத்துவம். 1

விளக்கம்: ஆர் அனந்தம், சற்று மனச்சோர்வு, சிறிது அர்ப்பணிப்பு, தொடர்பு கொண்டேயான உழைப்புணர்வு இவையெல்லாம் எதிர்பாரா உள்ளத்தினர் 2

33. i) ஒரு நெறிப்பட்ட மனத்துடன் கந்தவேளின் மலர்போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும். 2

ii) உள்ளத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றுமாகப் பேசும் வஞ்சகர்தம் உறவு தன்னைப் பற்றாதவாறு காக்க வேண்டும் என்று வேண்டுகிறார். 2

34. வாயிலோயே - புறநானூற்றுப் பாடல்.

i) கற்றோர் எத்திசையாயினும் சிறப்புடனே இருப்பர். 1

ii) கற்றோரை அறிந்து பரிசில் தருவதற்கு ஏற்ற உலகின் மன்னர் உள்ளனர். 1

iii) இவ்வுலகில் எத்திசையில் சென்றாலும் அத்திசையில் அவர்களுக்கு உணவு தவறாமல் கிடைக்கும். 1

iv) தாமும் நிலையாமையும் கற்றவர் ஆதலால் உண்மையை நெஞ்சாரக்கிலும் கொள்வார். 1

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

பகுதி: III பிரிவு: 2

35. பொருத்தமாக எழுதியதற்கு முழு மதிப்பெண் வழங்கலாம்.

36. i) முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள். அதனால் எழுத்துகள் நன்றாகவும் வரிசையாகவும் இருந்தன. 1
ii) உபாத்தியாயர் தரையில் எழுத அதன்மேல் பிள்ளைகள் எழுதுவார்கள். 1
iii) ஒன்றோடு ஒன்று படாமல், வரிகோணாமல் எழுதினார்கள். உருவங்கள் மாறாமல் இருந்தன. } 1
iv) சிலபோது தனித்தனியே ஏடுகளில் எழுதி அதைப்போல எழுதி வரச் சொல்வார்கள்.
v) நான்கெழுதி, கிறுக்கெழுதி கோடுகளில் ஆசிரியர் எழுதித் தர மாணவர்கள் பின்பற்றினார்கள். 1

37. சென்னையின் பண்பாட்டு அடையாளம்.
* புகழ்பெற்ற கட்டடங்களான மத்தியத் தொடர்வண்டி, தென்னகத் தொடர்வண்டி, எழும்பூர் தொடர்வண்டி, பொது அஞ்சல் நிலையம், உயர்நீதிமன்றம், பல்கலைக்கழகம் இன்னும் பல 1
* மெட்ராஸ் 'ராக்ஃபோர்டு' அல்லது சாரசனிக் கட்டட முறையில் அமைந்துள்ளது. இது இன்று அரசுக் காப்பகம் என்று அழைக்கப்படும். 1
* எழும்பூர் காப்பகம், கோட்டை அருங்காட்சியகம் அடையாளம். 1
* கன்னிமாரா நூலகம் இருக்கின்றன. திரைப்படத் துறையில், திரையரங்கம் போன்றவை. 1

38.

| சங்கப்பாடல் | ஆசிக்கோவை. |
| --- | --- |
| i) கடந்தடு தானை மூவிருங்கூடி | |
| உடன்றனிர் ஆயினும் பறம்பு | மெல்லினம் இனியன. |
| கொள்ளற்கோ அரிதே - புறநானூறு | மெய்கள் நட வல்லினம் அதிகம். |
| ii) படாஅம் ஈத்த கெடாஅ | உயர் நடையில் வலிகள் அதிகம் |
| நல்லிசைக் கடாஅ யானைக் | |
| கலிமான் பேக - புறநானூறு | |
| iii) புன்னையின் புணர்ந்த பொழிலே | அதோ தான் பெண்மை, பெண்மை |
| - நற்றிணை. | அமைந்துள்ளது. |
| iv) [illegible] தந்தை தந்தை | மென்மை மென்மை வந்து மென்மையாகவே |

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

பிரிவு 3

39. (அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது. 1

அணிப்பெயர்: இக்குறட்பாவில் பயின்று வரும் அணி நிரல்நிறையணி ஆகும். 1

அணி விளக்கம்: சொல்லையும் பொருளையும் அந்தந்த வரிசைப்படியே பொருள் கொள்ள வைத்தல் நிரல்நிறை அணியாகும். 1

அணி பொருத்தம்: 1
அன்பு, அறன் - பண்பு, பயன் என்பவற்றை முறையே இணைத்துப் பொருள் கொள்ளுமாறு அமைத்தல்.

(ஆ) அணி விளக்கம்: ஒரு பொருளை உருவகம் செய்து அதற்கு நேரடியாக வேறொரு பொருள்களை உருவகம் செய்யாமல் விடுவது ஏகதேச உருவக அணி ஆகும். 1

(எகா) இறள் 1

அணிப் பொருத்தம்: ஈம்புணை என்பதற்கு தெய்வம் என்பது பொருள். உறவினர்கள் நம்பு புணை (அ) அறத்தார் என்று கூறாமல் விட்டுவிட்டதால் இது ஏகதேச உருவக அணி ஆகும். 2

40. பாடாண் திணை:

திணை விளக்கம்: பாடு + ஆண் + திணை - பாடாண் திணை ஆகும். ஆண் மகனின் புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற சிறந்த பண்புகளைப் பாடுவது - பாடாண் திணையாகும். 1

சான்று: வாயிலோயே! வாயிலோயே! 1

திணைப்பொருத்தம்: பொருள் வேண்டி தன்னைக் காண வரும் பரிசில் பெறுபவர்க்கு உரிய பரிசினைப் பெற எப்போதும் வாயில் திறந்திருக்கும். உன்னால் நெடுமான் அஞ்சியன் தன்மை வெளிப்படுவது பொருத்தம்! 2

(அல்லது)

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2 கூதிர்ப்பாசறை: (ஈ)

இணை விளக்கம்: போர்மேற்சென்ற அரசன் குளிர் காலத்தில் தங்கும் படைவீடு ஆகும். 1

சான்று: மெய்க்காவலர் பெரும்பனி ஆடிய பலருடன் கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க. 1

விளக்கம்: தம் இனத்தைப் போக்கிப் பருவம் வந்து உடல் கைகளை நெருப்பில் காட்டிக் கன்னங்களில் வைத்து மக்கள் நடுங்கும். 1

இணை விளக்கம்: ஆயர்கள் தம் இனத்தைப் போக்க நெருப்பில் இளைக் காய்வது போல, போர்மேற் சென்ற அரசன் குளிர்காலத்தில் தங்கும் வீடு. 1

| | |
|---|---|
| 41. நயம் பாராட்டுக.<br>திரண்ட கருத்து 1<br>மையக்கருத்து 1<br>மோனை, எதுகை } 1<br>இயைபு, அணி } 1 | 42) பொருத்தமாக எழுதி இருப்பின் மதிப்பெண் வழங்கலாம். |

43. மொழிபெயர்க்க.

~~i) கல்விச் செல்வம், கற்றோருக்குச் செல்கின்ற இடமெல்லாம் சிறப்பைத் தரும்.~~

i) ஒரு புதிய மொழி என்பது புதிய வாழ்க்கை போன்றது. 1

ii) என்னுடைய மொழியின் எல்லையே என் உலகின் எல்லை 1

1 iii) பன்மொழி அறிவானது, ஒருவரின் இணைப்புறவால் ஆகும். 1

iv) ஒருவனை புரிந்து கொள்ள வேண்டுமென்றால், நீங்கள் அவர்களது மொழியாலேயே உரையாட வேண்டும். 1

பகுதி: IV நெடுவினா (அ)

| | |
|---|---|
| 44. குறிப்புச் சட்டகம்: 5/6<br>முன்னுரை<br>சுப்பு<br>தேனீ<br>கோணி<br>அக்கீவன்<br>கிடணான் | குறிப்புச் சட்டகம்: 5/6<br>முன்னுரை.<br>கதைத் தொடக்கம்<br>கதைத் தொடர் அறிய வேண்டியவை.<br>முடிவுரை. |

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

45 குறிப்புச் சட்டகம் : 5/6

முன்னுரை
சென்னையின் தொன்மை
இரண்டு ஆறுகள்
நகரம் உருவாக்கம்
பண்பாட்டு அடையாளம்
இந்தோ-சாரசனிக் கட்டடம்
சென்னை நூலகம்
சென்னை- நம்பிக்கை மையம்
போக்குவரத்து
அறிவின் நகரம்
முடிவுரை.

(அ) குறிப்புச்சட்டகம் : 5/6

முன்னுரை
மொழிசார் கலை
ஒலிக்கோலங்கள்
தொன்புலம்
தொல்லியல் போக்குகள்
முடிவுரை.

46 முன்னுரை : 5/6

மருதனின் பொறுப்புணர்வு
மருதனின் யோசனைகள்
மருதனின் மகிழ்ச்சி
ஊர் மக்கள் உணர்தல்
முடிவுரை.

(46) அல்லது 5/6

முன்னுரை :
விபத்துக்கான காரணங்கள்
விபத்துகளைத் தவிர்க்கும் நடவடிக்கைகள்
முடிவுரை.

47 பகுதி : V மனப்பாடம் : 3½ (4)

| | |
|---|---|
| பாடலின் தலைப்பு : | கம்பராமாயணம் |
| பாடலின் ஆசிரியர் : | கம்பர் |
| பாவகை : | அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் |

குகனொடும் ஐவர் ஆனேம்
முன்பு; பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம்;
எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனோம்!
புகல் அருங் கானம் தந்து;
புதல்வரால் பொலிந்தான் நுந்தை.

குறள் (2) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.
திருவள்ளுவர்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com